
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 ஜூன் 2006 இதழ் - 6



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net




## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 13 |
| 4. | வாலிபர் பகுதி | 16 |
| 5. | சிறுவர் பகுதி | 20 |
| 6. | கொலோசெயர் ஒரு கண்ணோட்டம் | 22 |
| 7. | பரலோக பயணிகளே | 23 |
| 8. | ஏன் யூதர்கள் இயேசுவை ....... | 27 |
| 9. | இயேசுவும், சிலுவையும் | 30 |

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor** — **S. Rajanayagam**

**Honorary Editor** — **J.C. Choate**


**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.17** **June- 2003** **Issue-6**


**ஆசிரியர் உரை**

## "எழுந்து பெத்தேலுக்குப் போ"



**ப**ரலோகத்தின் தேவனால் கொடையாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில், புகழுக்குரிய மனிதர்கள் பலர் தங்கள் தரத்தால் தலைநிமிர்ந்து நிற்பது நமக்குத் தெரியாததல்ல. அது போலவே, புகழ்பெற்ற சம்பவங்கள் என்று பல, படிப்போரின் நெஞ்சங்களை விட்டு அகலாமல் என்றும் நிலைத்து நிற்பதும் நாம் அறிந்த ஒன்றே. இப்படி சில மனிதர்களும், சம்பவங்களும் சிறப்பிடம் பெற்றிருப்பது போலவே, வேதாகமத்தில் உள்ள சில இடங்களும் மறக்க முடியாதவைகளாக மாறி, நம்முடைய கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் நின்று கொண்டேயிருக்கும். புகழுக்கு உரிய அம்மாமனிதர்கள் மாண்பு அடைந்ததற்கு பரமனோடு அவர்களுக்கிருந்த பக்திச் செயல்பாடு காரணமாக இருந்திருக்கும். சிறப்புக்குரிய அச்சம்பவங்கள் சரித்திரத்தில் இடம்பெற்றதற்கு, அவைகள் ஏற்படுத்திய மாற்றங்களும், தாக்கங்களும் காரணமாக அமைந்திருக்கும் அது போலவே, இவ்வரிய இடங்கள், மனதிலிருந்து இடம் பெயராமலிருப்பதற்கு, அவ்விடங்களில் நடந்த நிகழ்வுகள் காரணமாக மாறியிருக்கும்.

பேருக்கும், புகழுக்குமுரிய அம்மனிதர்களுக்கு உதாரணமாக ஆபிரகாம், மோசே, பேதுரு, பவுல் போன்றவர்களையும், சிறப்புக்குரிய சம்பவங்களுக்கு உதாரணமாக நோவா காலத்து பெருவெள்ளத்தையும், எலியா காலத்து கர்மேல் பர்வத சம்பவத்தையும், முதல் நூற்றாண்டு பெந்தெகொஸ்தே நாளின் ஆவித் திருமுழுக்கையும், மறக்க முடியாத இடங்களுக்கு உதாரணமாக, ஏதேன் தோட்டம், சீனாய் மலை, எருசலேம் மற்றும் அந்தியோகியா பட்டணம் போன்றவற்றையும் நாம் குறிப்பிடலாம். **மறக்க முடியாத இடங்களின் பட்டியலில்,** இம்மாதத்திற்கான **பெத்தேலையும்** நாம் கண்டிப்பாகச் சேர்த்து விட முடியும்.

ஒருவேளை பெத்தேல் என்பது, "மறக்க முடியாத இடங்கள்" பட்டியலில் இடம் பெறத் தகுதியானதுதானா என்று எண்ணத் தோன்றினாலும், இவ்விடத்தின் சிறப்புகளை உற்றுநோக்கின், ஆம், இதுவும் தகுதியானது தான் என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெரியும். எப்படியெனில், முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம், இந்த பெத்தேலில் தான் முதல்முதலாக பலிபீடம் கட்டினான் (ஆதி. 12; 7) மூன்றாமவராகிய யாக்கோபு, இந்த பெத்தேலில் தான் "ஏணித் தரிசனத்தைக்" கண்டான். (ஆதி. 28 ; 10-11) இந்த பெத்தேல் தான் "தேவனுடைய வீடு" என்றும், அழைக்கப்பட்டுள்ளது (ஆதி. 28; 17) இஸ்ரவேலர்கள் தங்களுடைய மார்க்க காரியத்தில் தேவனுடைய வழிநடத்துதலைத் தேடி, இந்த இடத்திலே தான் கூடியிருக்கிறார்கள் (நியா. 20; 18, 21 :2) இஸ்ரவேல் சரித்திரத்தில் இது ஒரு "பரிசுத்த இடமாக" இருந்துள்ளது. இப்படி இன்னும் பல சிறப்புகள் கொண்ட இந்த பெத்தேலை, "மறக்க முடியாத இடங்களின்" பட்டியலில் சேர்ப்பது தவறில்லை யென்பதை நீங்களும் இப்பொழுது ஒத்துக் கொள்வீர்கள் என்று திடமாக நம்புகிறேன்.

சரி, இந்த பெத்தேல் சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களையும் நாம் இங்கே பார்க்கப் போவதில்லை. சொல்லப் போனால், பார்க்கவும் முடியாது. நமக்குத் தேவையானது ஆதி. 35 ; 1-5-ல் அடங்கியுள்ள பெத்தேல் பகுதி தான். ஆனால், அப்பகுதியைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, இப்போது, ஆதியாகமம் 28-ம் அதிகாரத்தின் உண்மைகள் சிலவற்றைத் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

தன் தாயாகிய ரெபேக்காளின் ஆலோசனைப்படியும், ஏகபத்தினி விரதனும், தன் தகப்பனுமாகிய ஈசாக்கின் ஆலோசனைப் படியும், நம் ஊர் பண்டைய வழக்கத்தின்படியாகவும் தாய்மாமன் வீட்டிற்குப் பெண்கொள்ளும்படி புறப்பட்டான் (ஆதி. 28 ; 1-5) போகும் வழியில், ஓரிடத்தில் சூரியன் அஸ்தமித்தபடியால், ஒரு கல்லை எடுத்துத் தலையின் கீழ் வைத்து, நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். அங்கு அவனுக்குக் கிடைத்த ஏணிச் சொப்பனத்தின் மூலம், கர்த்தர் சில வாக்குத் தத்தங்களைத் தந்தார் (13-15) பிறகு, நித்திரை தெளிந்து, விழித்து, இவ்விதம் சொல்லுகிறார். "**.........மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது "வானத்தின் வாசல்" என்றான்** (ஆதி. 28 ; 16, 17).

மேற்கண்ட, இவ்விரண்டு வசனங்களையும் நாம் கவனித்துப் பார்த்தால், யாக்கோபு, ஏணி தரிசனத்தின் மூலம் நான்கு உண்மைகளைத் தெரிந்து கொண்டான் என்பதை அறியலாம். **1.** மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். **2.** இதை நான் அறியாதிருந்தேன் **3.** இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல. **4.** இது வானத்தின் வாசல். பொருள் பொதிந்த இந்த நான்கு வாக்கியங்களையும் நாம் ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால், புதிய ஏற்பாட்டில், பரலோகத்தின் தேவனால் திட்டமிடப்பட்டு (எபே.3; 9, 10) தீர்க்கதரிசிகள் பலரால் முன்னுரைக்கப்பட்டு (ஏசாயா.2;1-6; தானி.2;44) யோவான் ஸ்நானகனால் பிரசங்கிக்கப்பட்டு, (மத் 3:2) இயேசுவால் வாக்களிக்கப்பட்டு (மத் 16:18), பெந்தேகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் கட்டப்பட்ட, ஒன்றான மெய்சபையாகிய, **"கிறிஸ்துவின் சபைக்கு"** அப்படியே ஒத்து வருகிறது.

ஆம், எப்படி யாக்கோபு பெத்தேலுக்கு வந்து சேருமட்டும், பெத்தேலைப் பற்றிய மாபெரும் உண்மைகளை அறியாமல், அதன் அருமை பெருமைகளை உணராமல் எல்லா இடங்களைப் போல இதுவும் ஒன்று என நினைத்தானோ அது போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், பரிசுத்த வேதாகமத்தில், கிறிஸ்துவின் சபையைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பேருண்மைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல், எல்லாச் சபைகளைப் போல இதுவும் ஒன்று என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. தேவனுக்குப் பயப்படுகிற குடும்பத்திலே பிறந்து, யெகோவா வணக்கத்திலே வளர்ந்து, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் குணம் கொண்ட ஒரு மனிதனாக இருந்தும், பெத்தேலைப் பற்றிய உண்மைகளை எப்படி உணர்ந்து கொள்ளாமலிருந்தானோ அது போல, பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயமும், மெய்யான தேவனையும் அவருடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவையும் அவருடைய தியாகத்தையும் அறிந்திருந்தும், வேதத்தின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற மனதிருந்தும், அதே **வேதத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.**

முதலாவது, யாக்கோபு, **"மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலே இருக்கிறார்"** என்றான். இவ்வாக்கியம், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சபைக்குப் பொருந்துகிறதாக இருந்தால், கர்த்தர் எந்த சபையில் இருக்கிறார்? இயேசுவானவர், "ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்றார் (மத்.18 ; 20) கிறிஸ்தவ சமுதாயத்தால் மிகத் தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற வசனப் பகுதிகளில் இதுவும் ஒன்று. ஆராதனையைப் புறக்கணித்து அவமதிக்கின்ற கிறிஸ்தவர்களும், ஆராதனையை அற்பமாக எண்ணி வீட்டிலேயே இருந்து கொள்ளும் சோம்பேறிகளும், சபையை விட்டு பிரிந்து போகும் துரோகிகளும், தங்களுக்குத் தேவையான சமயத்திற்கு எடுத்துப் பயன்படுத்துவதற்காக, இவ்வசனத்தை நுனி நாக்கிலேயே வைத்திருப்பர். இப்படிப்பட்ட

வர்களுக்கு உதவியாயிருக்கும்படியாகவா இயேசுவானவர் இவ் வசனத்தைச் சொன்னார்? இல்லவே இல்லை. இவ்வசனத்திலே வலியுறுத்தப்பட்டிருக்கும் வார்த்தை "**நாமத்தினாலே**" என்பது. "நாமத்தினாலே" என்றால் "**அதிகாரத்தினாலே**" இதன்பொருள், கூடிவருகிறவர்கள் "இயேசுவின் அதிகாரத்தினாலே" கூடி வரவேண்டும். அப்படியானால், இயேசுவின் அதிகாரம் எங்கே இருக்கிறது? புதிய ஏற்பாடு தான் இயேசுவின் அதிகாரமாக உள்ளது (எபி. 9 ; 15-17 கொலே. 3; 17) இதன் பொருள், **இயேசுவின் நாமத்தில் கூடுவதென்றால், புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படி கூடுவதாகும்.** புதிய ஏற்பாட்டின் முழுமையான உபதேசப்படி. ஏதோ ஒரு வசனத்தின்படியல்ல. கர்த்தர் எந்த ஸ்தலத்தில் இருக்கிறார் என்பதை, யாக்கோபு தேவனிடத்திலிருந்து கிடைத்த சொப்பனத்தின் மூலம் உணர்ந்து கொண்டது போல, கர்த்தர் எந்த சபையிலே இருக்கிறார் என்பதை, தேவ ஆவியினால் நமக்கு அருளப் பட்டிருக்கிற வேத வசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

யாக்கோபின் இரண்டாவது வாக்கியம், "**இதை நான் அறியாதிருந்தேன்**" இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் நிலையும் இதுதான். அறிந்து கொள்ள வேண்டியதை, அறிந்து கொள்ள வேண்டியவர்கள், அறிந்து கொள்ளவேண்டிய நேரத்தில் அறிந்து கொள்வது அவசியம். யாக்கோபும் ஒருகட்டத்தில் அறியாதவனாகவே இருந்தான். ஆனால், வெளிப்பாடு கிடைத்த போதோ அறிந்து கொண்டான். அறியாமையுள்ள காலங்களை தேவன் பொறுத்துக் கொள்ளுகிறார் (அப். 17; 30). ஆனால், அறியும் வாய்ப்பும் கிடைத்த பிறகு, தேவன் பொறுத்துக் கொள்ளுவதில்லை. அப்போஸ்தலன் பவுலும் கூட, இயேசுவால் சந்திக்கப்படும் வரைக்கும், இயேசுவையும், அவருடைய சபையையும் அறியாமலே இருந்தான் (அப். 9 ; 1-5). ஆனால், வெளிப்பாடு கிடைத்த பிறகு அதை அறிந்து அதற்காகத் தன்னை ஒப்புக் கொடுத்து வாழ்ந்தான். இந்நாளில் வாழும் நமக்கு வேத வசனங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியால் அவைகளிலிருந்து, கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ள வேண்டிய நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

யாக்கோபின் மூன்றாவது வாக்கியம், பெத்தேல், "**தேவனுடைய வீடு**" என்பது. வீடு என்பது வாசம் செய்யும் இடம், தேவனுடைய வீடு என்றால், தேவன் வாசம் செய்யும் இடமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில், **கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையும், தேவனுடைய வீடு** என்று அழைக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலன் பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே, நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது (1. தீமோ.3;15) என்று கூறியுள்ளார். ஆகையால், கிறிஸ்துவின் சபையானது தேவனுடைய வீடாக உள்ளது. வேறு எந்த சபையும் தேவனுடைய வீடாக வேதாகமத்தால் அழைக்கப்படவில்லை.

யாக்கோபின் நான்காவது வாக்கியம், "**இது வானத்தின் வாசல்**" என்பது. "வாசல் அல்லது வாயில் என்பது, ஒன்றினுள் புகுவதற்கான முகம். அதாவது, அதன் வழியாகத்தான் பிரவேசிக்க வேண்டும், பிரவேசிக்க

முடியும். நம்முடைய இரட்சகராகிய இயேசுவானவர், "**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்**" (யோவா. 10; 9) என்று கூறியுள்ளார். இயேசுவின் வழியாகப் பிரவேசிப்பதெனில், அவருடைய உபதேசத்தின்படியாகப் பிரவேசிக்க வேண்டும். வானத்தின் வாசலாக, இயேசுவின் புதிய ஏற்பாடு சொல்லும் சபை இருக்கிறது. ஒருவன் பரலோகம் செல்ல வேண்டுமானால், இயேசுவாகிய வாசல் வழியாக, இயேசுவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டு வாசல் வழியாக, **புதிய ஏற்பாடு அறுதியிட்டுச் சொல்லும் கிறிஸ்துவின் சபை வழியாகவே செல்ல முடியும்.** கண்டிப்பாக வேறு வழியில்லை. அப்படி ஏதாவது இருந்தால், வசன ஆதாரத்தோடு காட்டுங்கள் பார்க்கலாம்!

சரி, இப்பொழுது, ஆதி. 35 ; 1-5 வசனப் பகுதிக்கு வருவோம்.

"தேவன் யாக்கோபை நோக்கி : நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். அப்பொழுது, யாக்கோபு தன் வீட்டாரையும், தன்னோடே கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி : உங்களிடத்தில் இருக்கிற **அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். நாம் எழுந்து பெத்தேலுக்கு போவோம்** வாருங்கள், எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச் செய்து, நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றார். அப்பொழுது அவர்கள் தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபிடத்தில் கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த **கர்வாலி மரத்தின் கீழே புதைத்துப் போட்டான்.** பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், **அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின் தொடராதிருந்தார்கள்.** (35; 1-5).

மேலுள்ள வசனப் பகுதியில், தேவன், தன் தாசனாகிய யாக்கோபை நோக்கி : "**நீ எழுந்து பெத்தேலுக்குப் போ**" என்கிறார். எந்த பெத்தேலுக்கு? தேவன் இருக்கிற ஸ்தலமாகிய பெத்தேலுக்கு, தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு. வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்கு, இங்கே, தேவனுடைய கட்டளையை ஏற்றுக் கொண்ட யாக்கோபு, **பெத்தேலுக்குப் போக என்ன செய்தான் என்று பார்த்து,** அதன் மூலம், நமக்குத் தேவையான சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## I யாக்கோபு பெத்தேலுக்குப் போக ஆயத்தமானான்

தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்குப் போகும்படி, யாக்கோபு செய்த முதல் காரியம் "**ஆயத்தம்**".

ஆம், தேவ கட்டளையைப் பெற்றுக் கொண்ட யாக்கோபு எப்படி செயல்பட்டான் என்று பாருங்கள். "அப்பொழுது யாக்கோபு தன்

வீட்டாரையும், தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி : உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு, உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்'' என்றான். அதாவது, **தேவனுடைய வீட்டிற்கு** இருக்கின்ற நிலையில் அப்படியே போக முடியாது என்பதையும் அவரண்டை போவதற்குத் **தடையாக இருக்கும்** அனைத்து காரியங்களும் **நீக்கப்பட வேண்டுமென்பதையும்** யாக்கோபு நன்றாக அறிந்து வைத்திருந்தான். ஆகவே தான், தன்னோடிருந்தவர்களைப் பார்த்து தடைகளை விலக்குங்கள், பரிசுத்தம் பண்ணுங்கள், வஸ்திரங்களை மாற்றுங்கள் என்று கூறினான்.

அருமையானவர்களே, நாமும் கூட தேவனுடைய வீடாகிய, வானத்தின் வாசலாகிய கிறிஸ்துவின் சபைக்குப் போவதற்கு, முதலாவது நம்மை ஆயத்தம் செய்ய வேண்டுவது அவசியம். எந்த ஒரு காரியத்தையும் சரியாய்ச் செய்வதற்கு ஆயத்தம் மிகவும் அவசியம். சீனாய் மலைக்கு மோசேயை அழைத்த தேவன், "விடியற்காலத்தில் நீ **ஆயத்தமாகி**, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்'' என்றார் (ஆதி. 34 ; 2) **ஆயத்தத்தின் அருமையை உணர்ந்த தேவன், ஜனங்கள் தன்னண்டை வரும்போது, பூரணமாய் வரவேண்டுமென்று எதிர்பார்த்து, ஓய்வு நாளுக்கு முந்தின நாளை "*ஆயத்த நாள்*'' என்று கூறுகிறார்** (மாற்கு. 15 ; 42).

தேவனுக்காக ஆயத்தமாவதின் முக்கிய நோக்கம், தேவனுக்குப் பிரியமில்லாதவைகளை விலக்கிப் போடுவதாகும். தடையாக இருப்பவைகளைத் தகர்த்துப் போடுவதாகும். எதிராக இருப்பவைகளை எடுத்துப் போடுவதாகும். தேவனுக்கும், மனிதனுக்கும் பெருந்தடையாக இருப்பது பாவமாகும். அக்கிரமங்களும், பாவங்களுமே தேவனுக்கும், நமக்கும் பிரிவினையை உண்டாக்கி அவருடைய முகத்தை நமக்கு மறைக்கிறது. (ஏசா. 59;1,2) தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரிக்கும் பாவத்திற்கு முதலாவது முடிவு கட்ட வேண்டும். பாவத்திற்கு அடிப்படைக் காரணம் அந்நிய தெய்வங்கள் என்பதை உணர்ந்த யாக்கோபு, அந்த தெய்வங்களை வாங்கி "ஓர் கர்வாலி மரத்தின் கீழ் புதைத்துப் போட்டான்'' ஆம், பாவத்திற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்தான்.

தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபைக்கு ஒருவன் வந்து சேர வேண்டுமானால், பாவங்கள் அறவே கழுவப்படவேண்டியது அவசியம். "இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி ஒருவனை சுத்திகரிக்கும்'' (1.யோவான்.1;7) இயேசுவின் அந்த மகிமையான இரத்தத்தோடு ஒருவன் வேதாகம ஞானஸ்நானத்தின் மூலம் தொடர்பை ஏற்படுத்தி கொள்ளமுடியும் (ரோமர். 6 ; 4, 1. பேதுரு.3 ; 21).

**II யாக்கோபு பெத்தேலுக்கு எழுந்து போனான்**

தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்குப் போகும்படி, யாக்கோபு செய்த இரண்டாவது காரியம் "**எழுந்து சென்றது**''.

தேவ கட்டளையைப் பெற்றுக் கொண்ட யாக்கோபு, தன்னையும், தன்னோடிருந்தவர்களையும் ஆயத்தம் செய்தததோடு நிறுத்தியிருப்பானானால், அவன் பெத்தேலுக்குப் போயிருக்க முடியாது. மாறாக, "நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள் (35: 3) என்று கூறி, முன்னின்று வழி நடத்தினான். தீர்மானம் எடுப்பதும், ஆயத்தமாவதும் கொஞ்சம் சுலபம். ஆனால், தொடங்குவதும், செயல்படுத்துவதும் சற்று சிரமம். ஆனால், யாக்கோபோ, தீர்மானித்தான், ஆயத்தமானான், அதன்படி செய்தான்.

இன்றைக்கு, **தேவனுடைய வார்த்தையின்படி, தேவனுடைய வீட்டிற்குப் போக முடிவெடுத்த யாக்கோபு போல,** ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான, ஏன் கோடிக்கணக்கான யாக்கோபுகள் கிறிஸ்தவத்திற்கு உலகெங்கும் தேவை. ஆம், தேவனுடைய வீடாகிய, வானத்தின் வாசலாகிய, கிறிஸ்துவின் சபைக்குப் போவேன் என்று தீர்மானிக்கும், ஆயத்தமாகும், எழுந்து புறப்படும் யாக்கோபுகள் அவசரமாக தேவை. அப்படிப்போவதற்கு தடையாக இருக்கும் பாவங்களாகிய பாரம்பரியங்கள், மனித உபதேசங்கள், சபைக் கட்டுப் பாடுகள், உபதேசக் கோட்பாடுகள், குடும்பப் பெருமைகள், கிறிஸ்தவ மூட நம்பிக்கைகள் போன்றவற்றை கிறிஸ்துவுடனேகூட அடக்கம் செய்யப்படும் ஞானஸ்நானமாகிய கர்வாலி மரத்தின் கீழ் நிரந்தரமாகப் புதைத்துப் போடும் யாக்கோபுகள் தேவை. தேவனைத் தேடும் ஒவ்வொருவனும் அவருக்காக எழுந்து செயல்படுகிறவனாக இருக்க வேண்டும். அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்கு என்ன எழுதுகிறார் பாருங்கள். "ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபே. 5:14) தேவன் நம்மை பிரகாசிக்கச் செய்ய நாம் நம்முடைய பாவ நிலையிலிருந்து எழுந்தே ஆகவேண்டும்.

எழுந்து தகப்பன் வீட்டிற்கு வருவ்தற்கான சிறந்த உதாரணம், நம்மால் கெட்ட குமாரன் என்று சொல்லப்படும் இளைய குமாரன் தான் (லூக். 15 அதி) அவன் தகப்பனை விட்டு பிரிந்து போன நிலையில், யோசித்தவாறே இருந்திருப்பானானால் என்ன ஆகியிருக்கும்? அல்லது தீர்மானித்து புறப்படாமல் அங்கேயே இருந்திருப்பானானால் எப்படியிருந்திருக்கும்? தகப்பனண்டை வந்திருக்க முடியுமா? தகப்பன் அவனை ஏற்றிருப்பாரா? சிறந்த வாழ்வு தான் அவனுக்கு கிடைத்திருக்குமா?

ஆகையால், ஆவிக்குரிய வாழ்விலே, நாம் தேவனுடைய வீடாகிய, வானத்தின் வாசலாகிய கிறிஸ்துவின் சபையைப் பற்றிய எல்லா உண்மைகளும் தெரிந்த நிலையிலும், எப்படி, எப்படி என்று யோசித்துக் கொண்டே இராமல், எழுந்து புறப்படுவோம். அப்பொழுது, தேவன் உங்களை பிரகாசிக்கச் செய்வார்.

## III. யாக்கோபு ஆசீர்வாதம் பெற்றான்

மூன்றாவதாக, தேவனுடைய வார்த்தையின்படி தேவனுடைய வீடாகிய பெத் தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்கு ஆயத்தமாகி, எழுந்து போனதினாலே, யாக்கோபு ஆசீர்வாதம் அடைந்தான் என்பது.

ஆம், தேவ கட்டளையை ஏற்றுக் கொண்டு, தேவனண்டை போவதற்குத் தடையாக என்னவெல்லாம் இருக்கிறதென்று கண்டு, அவைகளை எடுத்துப் புதைத்து தன்னை ஆயத்தமாக்கினதோடல்லாமல், எதைப் பற்றியும், யாரைப்பற்றியும் கவலைப்படாமல் எழுந்து புறப்பட்டான். இந்த யாக்கோபை, தேவன் பாதுகாத்தார். இங்கே வசனம் சொல்வதை கவனியுங்கள். **"பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள்; அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின் தொடரா திருந்தார்கள்"** (35; 5) பாதுகாப்போடு தேவன் நிறுத்திக் கொள்ளாமல் யாக்கோபை ஆசீர்வதிக்கவும் செய்தார். "யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்த பின்பு தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, **அவனை ஆசீர்வதித்தார்** (35; 9) **பாதுகாத்து, ஆசீர்வதித்ததோடு,** "நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப் பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன்...." என்று வாக்கும் கொடுத்தார் (35; 12). **தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருக்காக ஆயத்தமாகி, அவருக்காக எழுந்து போன** யாக்கோபை தேவன் எப்படி **ஆசீர்வதித்தார்** என்று பாருங்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் படியே விரும்புகிறோம். அப்படி விரும்புவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் குறுக்கு வழிகள் எதுவும் கிடையாது. நாம் ஒவ்வொருவரும், நம்முடைய யாக்கோபைப் போல செயல்பட வேண்டும், அதுதான் ரகசியம். யாக்கோபு, தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தது போல, இயேசுக் கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு உபதேசத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். யாக்கோபு தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்கு, வானத்தின் வாசலாகிய பெத்தேலுக்கு ஆயத்தமாகியது போல், நாமும் தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிப்பதற்கு வேத வசனங்களின்படி ஆயத்தமாக வேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நம்மை விட்டு விலக்க வேண்டும். இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நாம் விசுவாசித்து (மாற்கு. 16; 16) மனந்திரும்பி (அப். 2; 38) அறிக்கையிட்டு (ரோமர்.10; 9, 10) கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தின் மூலம், நம்முடைய பாவங்களை அடக்கம் செய்ய வேண்டும். (ரோமர். 6; 3-6)

இவைகளையெல்லாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் போல நாம் செய்ய கிறிஸ்துவின் உபதேசப்படி எழும்பிப் பிரகாசிப்போமானால், யாக்கோபை ஆசீர்வதித்த தேவன் நம்மையும், இச் சரீர வாழ்க்கையிலும் (மத்.6;33), ஆவிக்குரிய வாழ்க்கையிலும் (எபே.1;3) அபரிதமாக ஆசீர்வதிப்பார்.

ஆகையால், இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் எழுந்து, பெத்தேலாகிய கிறிஸ்துவின் சபைக்கு வந்து, தேவனுடைய பாதுகாப்பையும், இம்மைக்கும், மறுமைக்குமுரிய ஆசீர்வாதத்தையும், பரலோக வாழ்வுக்கான வாக்குத் தத்தையும் பெற்றுக் கொள்வோமாக! ஆமென்.

**செ. ராஜநாயகம்.**

# சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல்

சுவிசேஷத்திற்கு ஒருவர் கீழ்ப்படிய முடியுமா? அது முடியாது என்று சொல்பவர்கள் உண்டு. ஆனால் வேதாகமம் நமக்கு முடியும் என்று போதிக்கிறது. சென்ற இதழ்களில் நாம் சுவிசேஷத்தின் உண்மைகள் பற்றி படித்தோம். நாம் அவைகளை நம்ப வேண்டும். மேலும் சுவிசேஷத்தின் கட்டளைகளுமிருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

## சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

முதலாவதாக, 1. கொரிந்தியர். 15 ; 1-4ல் பவுல் பட்டியலிட்ட சுவிசேஷத்தின் உண்மையிலிருந்து நாம் ஆரம்பிப்போம். அவர் சுவிசேஷத்தை கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் என்று கூறுகிறார். ஆனால் இதற்கும், கீழ்ப்படிதலுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று நாம் பார்க்கபோகிறோம் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதுவதை கவனியுங்கள் : "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினால் தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர். 6 ; 17, 18) அவர்கள் பாவத்திற்கு அடிமையாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் நீதிக்கு அடிமையாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இம்மாற்றத்தை நிகழ்த்தியது எது? அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு அவர்கள் மனப்பூர்வமாக கீழ்ப்படிந்தார்கள். வேறு வகையில் சொன்னால், அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். ஆனால் அவர்கள் தகவல்களுக்கு எப்படி கீழ்ப்படிய முடியும்? அவர்களால் முடியாது, அவர்கள் அப்படி செய்யவுமில்லை, உபதேச சட்டம் என்று சொல்வது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல், இவர்கள் அந்த உபதேச சட்டத்திற்கு கீழ்படிந்தார்கள்.

அப்படி அவர்கள் செய்யும்போது, பாவத்திற்கு மரித்து, தண்ணீரிலே ஆண்டவரோடு அவர்கள் அடக்கம் பண்ணப்பட்டு, அந்த தண்ணீர் கல்லறையிலிருந்து அவர்கள் உயிர்த்தெழுந்தார்கள். இந்த கருத்துக்கள் எல்லாம் ரோமர் 6ம் அதிகாரம் முதல் பகுதியில் இருக்கிறது. நாம் அதை கவனிப்போம். "ஆகையால் என்ன சொல்லுவோம் கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே

ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து வுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக் கிறோம்" (ரோம : 6; 1-6). ஆகவே தான் அவர்கள் உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிந்தார்கள் என்கிறோம். அவர்கள் மாத்திரம் அல்ல இன்று சுவிசே ஷத்திற்கு கீழ்படிகிறவர்களும் ஆண்டவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தங்கள் செயலின் மூலமாக காண்பிக்கின்றனர்.

நாம் தொடர்ந்து பார்க்கையில், சுவிசேஷத்தின் கட்டளைகள் என்ன என்பதையும், அவைகள் எப்படி கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதையும் கவனிப்போம். ஆண்டவர், அப்போஸ்தலர்களுக்கு கட்டளை கொடுத்தார். "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு. 16; 15,16). மத்தேயு சொல்லும் போது, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்; (மத். 28 ; 19, 20). அங்கே ஆண்டவர் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று கட்டளையிடுகிறார். அது மாத்திரமல்ல, இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்ற கட்டளையும் தந்தார்.

ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்ற அப்போஸ்தலர்கள் எருசலேமில் பிரசங்கிப்பதை பார்க்கிறோம். (அப். 2) அவர்கள் இயேசுவே தேவ குமாரன் என்று ஆதாரங்களைக் கொண்டு நிரூபித்தார்கள். இதை கேட்டு திருப்தி அடைந்த மக்கள் ஒரு கேள்வியை கேட்கிறார்கள், "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப். 2; 37). அதற்கு பின்பு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறினார். பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புகென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்! (அப்.2; 38) அப். 9ம் அதிகாரத்தில் சவுலிடத்தில் ஆண்டவர் தரிசனமான போதும் அவன் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று

கேட்டான். ஆண்டவர் எழுந்து பட்டணத்திற்குள்ளே போ. அங்கே நீ செய்ய வேண்டியது உனக்குச் சொல்லப்படும் என்றார். அனனியா வந்து அப்படியே செய்தார். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்." அப். 22; 16).

அப்.8ம் அதிகாரத்தில், பிலிப்பு, எத்தியோப்பிய மந்திரியிடம் பிரசங்கித்தபோது அவன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதற்கு பின்பு நடந்த உரையாடலை கவனியுங்கள். "அதற்கு பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான். (அப். 8; 37-39)

சுவிசேஷத்தின் கட்டளைகள் என்ன? முதலாவது, சுவிசேஷம் பிரசங்கிப்பதை ஒருவன் கேட்க வேண்டும். இரண்டாவது, தேவன் மீதும், கிறிஸ்து, தேவ குமாரன் என்றும் விசுவாசிக்க வேண்டும். மூன்றாவது, அவன் தன் எல்லா பாவத்திலிருந்தும் மனந்திரும்ப வேண்டும். நான்காவது, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். ஐந்தாவது, அவன் தண்ணீரில் மூழ்கி பாவமன்னிப்பிற்கென்று அடக்கம் பண்ணப்பட வேண்டும்.

தொடர்ந்து நாம் படித்தால், இந்த கட்டளைக்கு ஒருவன் கீழ்ப்படியும் போது அவன் தன் பாவத்திற்கு மரிக்கிறான். அதாவது, அவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறான். தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி அதை எல்லாம் விட்டுவிடும் அளவிற்கு அவன் ஆண்டவர் மீது விசுவாசம் வைக்கிறான். ஆகவே இது பாவத்திற்கு மரித்தல் என்கிறோம். அந்த மரணத்தை தொடர்ந்து அடக்கமிருக்கிறது, அதாவது தண்ணீரில் அடக்கம், நாம் ஏற்கனவே பார்த்தோம் பிலிப்பும், எத்தியோப்பிய மந்திரியும், இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், அந்த அடக்கத்தை நிகழ்த்தத்தான் அப்படி இறங்கினார்கள். கொலோசெயர் 2; 12, ரோமர்.6; 4 இவைகள் ஞானஸ்நானம் தண்ணீரில் அடக்கம் பண்ணுதல் என்கிறது. அப்போஸ்தலர் 8ல் பிலிப்பும் மந்திரியும் தண்ணீரிலிருந்து கரை ஏறினார்கள் என்று சொல்கிறது. ரோமர் 6ம் அதிகாரமும், அடக்கம் பண்ணப்பட்டவர்கள், புதிதான ஜீவன் உள்ளவர்களாக எழுந்திருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே தான், ஒரு தனிநபர் இந்த எளிதான கட்டளைக்கு கீழ்ப்படியும் போது அவன் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் இவைகளை பிரதிபலிக்கிறான் என்கிறோம்.

யோவான்.3; 5ல் இயேசு ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறப்பதைக் குறித்து பேசுகிறார். இதை நாம் ஒருவர் தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டது, அந்த தண்ணீரிலிருந்து எழும்போது பிறக்கிறான் அல்லது தண்ணீரிலான கல்லறையிலிருந்து உயிர்ப்பிக்கப்படுகிறான் என்றும் சொல்லலாம். ஆகையால் அவன் புதிதான ஜீவன் உள்ளவனாக வாழ முற்படலாம் ஏனென்றால் அவன் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக இருக்கிறான் (2. கொரி. 5; 17).

கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படி சரியான முறையில் கீழ்ப்படியும் ஒருவனுக்கு வெகுமதிகள் உண்டு. ஆனால் ஒன்றை மனதில் வையுங்கள், ஒரு கட்டளையை கூட்ட வேண்டும் என்றோ அது முக்கியமில்லை என்றோ சொல்ல முடியாது ஒருவர் எல்லாக் கட்டளைகளையும் சரியாக, முழு இருதயத்தோடு கீழ்ப்படியும் போது தான் அவனை சபையில் கர்த்தர் சேர்க்கிறார், எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதத்தால் நிரப்புகிறார். நித்திய ஜீவன் என்னும் நம்பிக்கையையும் தருகிறார்.

சுவிசேஷம் எல்லாருக்கும் பொருந்தக் கூடியதாக இருந்தாலும், இரட்சிப்பை பெற அந்த சட்டத்திற்கு ஒருவன் கீழ்ப்படிய வேண்டும். பவுல் புலம்புகிறார் "ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து, ஏசாயா கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான்" (ரோமர். 10 ; 16) அதை நாம் பார்க்கும் போது, இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் கீழ்ப்படிய வேண்டும் என்று அறிகிறோம். ஆனால் கீழ்ப்படியாதவர்களை பற்றி என்ன? அவர் சொல்கிறார் "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்க்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும், அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது அப்படியாகும் "(2. தெச.1; 7-9). தேவன் அறியாத அறியாமையானாலும் கர்த்தருக்கு கீழ்ப்படியாத கீழ்ப்படியாமையானாலும் அதற்கு ஒரு தீர்ப்பு தான். அது ஆக்கினை தீர்ப்பு. கிறிஸ்துவும் அதை தான் சொன்னார். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு. 16 ; 16). ஆகையால், இத்தனை பெரிதான இரட்சிப்பை நாம் அசட்டை செய்தால் நாம் தப்பிக்க முடியாது. (எபி.2; 2,3).

**J.C. Choate** **J.C. சோட்.**

# விருந்தினரை உபசரிப்பதில் பெண்களின் பெரும் பங்கு

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு". (எபி. 13 : 2) பிறரை உபசரிக்கும் குணமானது சுயநலமற்ற, மதிப்பிற்குரிய ஒரு செயலாக காலாகாலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

ஒரு நாள் மூன்று மனிதர்கள் ஆபிரகாமின் கூடாரத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களைச் சந்திக்க ஆபிரகாம் ஓடிச் சென்று, அவர்களை நோக்கி, "எங்கள் மரத்தின் நிழலில் ஓய்வாகத் தங்கிச் செல்லுங்கள்" என்று கெஞ்சி அழைக்கிறார். பின்னர், அவர்களுக்கு உணவு படைத்திட தனது மனைவி சாராளிடம் பணித்தார். அவளும் ஆகாரத்தை சமைக்கும் பணியில் ஈடுபடலானாள். தனது மந்தைக்கு அவரே நேரில் சென்று, சிறந்த கன்றுக்குட்டி ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து, தமது வேலைக்காரனிடம் கொடுத்து, அதை பக்குவமாகச் சமைக்கச் சொல்லி அனுப்பினர். பின்னர், வெண்ணெய், பால், இறைச்சி யோடு அவர்களுக்கு விருந்து படைத்து, அவர்கள் சாப்பிடுவதை அருகில் நின்று கவனித்தார். (ஆதி. 18)

அந்த முக்கியமான நாளிலே, ஆபிரகாம் கர்த்தருக்கும் (ஆதி. 18 : 13) மற்றும் இரண்டு தூதர்களுக்கும் (19 : 1) மனிதர்களின் பார்வையில், விருந்தளிப்பவராக இருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஆபிரகாமும் சாராளும் அந்நாளில் காட்டிய அதே போன்ற உபசரிப்பை, கிறிஸ்தவர்களும் கடைபிடிக்க வேண்டும் என்று எபிரேய எழுத்தாளர் புதிய ஏற்பாட்டில் வற்புறுத்துகிறார்.

மற்றுமோர் சந்தர்ப்பத்திலே, தேவனின் தீர்க்கதரிசியாகிய எலிசா, "சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் பண்ணும் படி அங்கே வந்து தங்குவான். அவள் தன் புருஷனை நோக்கி : இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய

மனிதனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.

நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்து விளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும் போது அங்கே தங்கலாம் என்றாள்". (II இராஜாக்கள் 4 : 8-10). அதன் பின், எலிசாவும் அவன் வேலைக்காரனாகிய கேயாசும் அவ்வழியாக செல்லும் போதெல்லாம் அந்த மேல் வீட்டின் அறையிலே தங்கிச் சென்றார்கள்.

ஒரு தீர்க்கதரிசியான எலிசாவின் வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை. அவருடைய சரீரத் தேவைகள் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அந்த சூனே நாட்டுப் பெண்மணி கவனித்திருந்தாள். சிலவேளைகளில் அவருடைய உயிருக்கே அந்நாட்டுக் குருக்களாலும், இஸ்ரவேலின் அரசியல் எதிரிகளாலும் ஆபத்தான நிலை இருந்தது என்பதை அறிந்திருக்கக்கூடும். 2. இராஜாக்கள் 6 : 1 – 23 வசனங்களில் பதிவு செய்துள்ள படி, சீரியாவின் இராஜா எலிசாவைக் கொல்லத் திட்டமிட்டிருந்தான்.

ஆனால், அந்த சூனே நாட்டுப் பெண்மணியின் இரக்கமுள்ள இதயமானது எலிசாவின் துன்பங்களை அறிந்து, அவருக்கு உதவ முன் வந்தது. அவ்வழியாக எலிசா செல்லும் போதெல்லாம் அவருக்கு உணவளித்து உபசரித்தாள். அவனுக்கென்று ஒரு அறையை ஒதுக்கி, அதில் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தாள்.

அந்த சூனே நாட்டுப் பெண்மணி தெய்வ பயமும் உபசரிப்பதில் சிறந்தவளாக இருந்ததுமல்லாமல், தேவ ஏவுதலால் இராஜாக்களின் புத்தகத்தை எழுதியவர் குறிப்பிடுவது போல, "கனம் பொருந்திய" பெண்ணாக இருந்தாள். எவ்வளவு பாராட்டுக்குரிய வார்த்தைகள் அவை; இன்று தேவனுடைய குடும்பத்திலுள்ள பெண்களாகிய நாம், நமது சொந்த வாழ்க்கையில் வளர்த்துக் கொள்ள வேண்டிய குணநலன்களைப் பற்றி அவை விவரிக்கின்றன.

அந்த சூனே நாட்டுப் பெண்மணியைப் பற்றி நாம் வேறு என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? அவள் அடக்கமான பெண். அவளுடைய சிறப்பான அன்புள்ள காரியங்களுக்கு ஈடாகத் தான் என்ன செய்யட்டும் என்று கேட்க எலிசா அவளிடம் ஆளனுப்பிய போது, அப்பெண்மணி எலிசாவின் அறைக்குள் பிரவேசித்து அவருடைய தனிமைக்கு இடையூறு

செய்யவில்லை. 2. இராஜாக்கள் 5 : 15ம் வசனம் கூறுகிறது : "...... அவளைக் கூப்பிட்டபோது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்" எவ்வளவு அடக்கத்தையும் ஞானத்தையும் நாம் காண்கிறோம்!

தேவனிடத்தில் மிகப்பெரிய நம்பிக்கையையும் தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் வல்லமையையும் நாம் பார்க்கிறோம். எலிசாவின் தீர்க்க தரிசனத்தின்படி, அவளுக்கு ஒரு மகன் இருந்தான் (2 இராஜாக்கள் 4 : 17) காலப் போக்கில் சடிதியில் சுகவீனப்பட்டு அவன் மடிந்து போனான் என்பது உண்மையாயிற்று. அப்பெண்மணி என்ன செய்தாள்? அவளுடைய துயரத்திற்காக அழுது புரண்டாளா? இல்லை. தேவனுடைய மனிதனைக் காண இந்த எதிர்பாராத வேளையிலே ஏன் புறப்பட்டுப் போகிறாய் என அவளது கணவன் கேட்ட போது கூட "எல்லாம் சரிதான்" ( 2 இராஜாக்கள் 4 : 23) என்று அவள் பதிலளித்தாள். அதிக விசுவாசமுள்ள ஒரு பெண்மணியாக அவள் காணப்பட்டாள்.

இன்று கிறிஸ்தவ பெண்மணிகளில், தெய்வ பயமிக்க ஒரு வாழ்க்கையின் சக்தி நம்மைச் சுற்றியுள்ளோரை வசீகரிக்கும், பெருந்தன்மை, உபசரிப்பு, சுயநலமின்மை, அடக்கம், விசுவாசம் போன்ற நற்குணங்களை நம்மில் பிறர் காணும் போது தேவனுடைய வழியில் அவர்கள் ஈர்க்கப்படுவார்கள்.

**ரேச்சல் நாயகம்**

கரண் டி.வி.யில்

**திருமறை தியானம்**

**தொலைக்காட்சி நிகழ்ச்சி**

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர்
திருமறை தியான நிகழ்ச்சியில்
நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.

நாள் : **பிரதி ஞாயிறு**

நேரம் : **மதியம் 1.00 முதல் 1.30 வரை**

**(கோவை, திருப்பூர், ஈரோடு பட்டணங்களில் மட்டும்)**

கண்டு, கேட்டு தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

# தூரவிலிருந்து தூக்கிவிட்டவன்

**சா**லையில் நடக்கும் முதியவர், தட்டுத் தடுமாறி ஒரு பக்கமாக சாய்ந்து, நடந்து போகையில் தவறி விழுந்தால் தூக்கிவிட முற்படுவார் சிலர், மழலை செல்வத்திற்கு மருள் என்றால் என்னவென்றும், ஆபத்து வருகிறது என்றால் என்னவென்றும் அறிய முடியாது என்பதினால் இங்கும், அங்கும் துள்ளி ஓடும்போது ஏதாவது ஒன்று தடுக்கி தவறி விழுந்தால் அன்னையின் கரம் அரவணைத்துக் கொள்ளுமென்பது திண்ணம். செழிப்பான மலை முகடுகளில் இரை மேய்ந்து கொண்டிருக்கும் ஆடு படுகுழியில் விழுந்துவிட்டால் காக்கும் கரம் கொண்டு பாதுகாக்க பாய்ந்து வருவான் மேய்ப்பன் என்பதில் ஐயமேதுமில்லை.

பரலோக தேவனால் பக்குவமாக வழி நடத்தப்பட்ட இஸ்ரவேல் ஜனம் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டபின் பல ஆண்டுகள் உருண்டோடி விட்டது. அரசர்களை தங்களுக்கென்று கேட்டு, இந்த ஜனங்கள் தேவனை விட்டு வெகு தூரம் சென்று விட்டனர். ராஜ்யம் பிளவுபட்டபின்பு, இஸ்ரவேல் என்னும், 10 கோத்திரம் முழுமையாக தேவனைவிட்டு பின் வாங்கிப் போனது. யூதா தேசமும் முழுமையாக பின்வாங்கும் நிலையிலிருந்தது, பாவத்திற்கு பஞ்சமில்லை, அவர்களின் அக்கிரமமோ வான பரியந்தம் எட்டியது, விளைவு அழிவு வந்தது. அப்படி வரப்போகும் அழிவை அறிவிக்க வேண்டும், என்ற நோக்கோடு தீர்க்கதரிசிகளை தேவன் எழுப்பினார், இப்படி முன் அறிவித்த போதாவது திருந்த ஒரு சந்தர்ப்பம் என நினைத்தார்களா இஸ்ரவேலர்கள் இல்லை. சத்தியத்தை பறை சாற்றும்படி தேவன் அனுப்பிய எரேமியாவை துரவிலல்லவா போட்டார்கள் இந்தப் பாதகர்கள்.

## உளைகுழியில் அமிழ்ந்தவனுக்கு அமிழ்தாயிருந்தவன்

யூதா தேசத்து பிரபுக்களும் ஜனங்களும் மிகுதியாக பாவம் செய்ததால் தேவன் அவர்களை தேசத்திலிராதபடிக்கு துரத்திவிட சித்தமானார். எப்பொழுதும் தேவன் எச்சரிப்பை மனிதனுக்குத் தராமல் எதையும் செய்வதில்லை. ஆதலால் அவர் தீர்க்கதரிசிகள் பலரை எழும்பப் பண்ணினார். இயேசுவின் பாடுகளைக் குறித்து 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாம் வியக்கும் வண்ணம் விவரமாக சொன்ன ஏசாயா, தேவனுடைய ராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை என்றுரைத்த தானியேல், உயிரடையும் எலும்புகளைக் கண்ட எசேக்கியேல், அக்ந்தைக்கு அழிவுதான் பரிசு என்று சொன்ன

ஆமோஸ். தேவனைப்பற்றிய அறிவு இல்லையென்றால் சங்காரம் என்றுரைத்த ஓசியா என்று பலரை தேவன் எழுப்பினார்.

எரேமியா என்னும் நம்மவர், தேவன் யூதர்களை பாபிலோனியர்களின் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றும் அங்கே நீங்கள் 70 ஆண்டு காலம் இருப்பீர்கள் என்று அறிவித்தார் (எரே. 25; 11) பாபிலோனியர்களுக்கு எதிர்த்து நிற்க வேண்டாம் என்றும், தேவன் அவர்களை அனுப்புகிறார் என்றும், அப்படி நீங்கள் இந்த நகரத்தில் தரித்திருந்தால் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவீர்கள் என்றும் முழங்கினான் (38; 1,2) ஆனால் அவரை கேட்டவர்களோ, இவன் எதிரிகளின் ஆதரவாளன் என்று நினைத்தார்கள் (38;4) ஆதலால் சிதேக்கியோ ராஜாவிடம் அவனை கொல்லவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். கொற்றவனாவது, காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை (நீதி. 25 : 2) என்று அறிந்து உண்மையை கண்டிருக்கலாம்.

சிதேக்கியாவோ ஜனங்களின் கோபத்திற்கு ஆளானால் நாம் சிதைந்து போவோம் என்று எண்ணி, "உங்களுக்கு விரோதமாய் ராஜா ஒன்றும் செய்யக் கூடாது" என்று சொல்லி தனக்கு முதுகு எலும்பில்லை என்பதை குனிந்து காட்டி, எரேமியாவை ஒப்புக்கொடுத்தான் (38; 5) இவனுக்கும் புதிய ஏற்பாட்டு பிலாத்துவுக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாக தெரியவில்லை. எரேமியாவை துரவிலே போட்டது சில கயவர் கூட்டம். இப்படி துரவிலே போட்டு விட்டதால் தொடரலாம் நமது ஆட்டம் என்பதே அவர்களின் எண்ண ஓட்டம். அந்த துரவிலே தண்ணீர் இல்லாததால் உளையாகியிருந்தது அதிலே எரேமியா அமிழ்ந்தினான்.

சத்தியத்தை சொன்னதால் சத்துருவான எரேமியா இப்பொழுது உளையிலே, தேவன் சும்மா இருப்பாரா, இல்லை எத்தியோப்பியனை எழுப்புகிறார், அவன் பெயர் "**எபெத்மெலேக்**" அப்பெயருக்கு ராஜாவின் ஊழியக்காரன் என்று பொருள். இந்த ராஜாவின் ஊழியன், எரேமியா துரவிலிருக்கிறான் என்பதை கேள்விப்பட்டு, "அரண்மனையிலிருந்து புறப்பட்டுப்போய், இராஜாவை நோக்கி" (38; 8) என்று வசனம் சொல்கிறது நீதியை பேச வேண்டும், அதுவும் ராஜாவிடம் பேச வேண்டும், ஒருவேளை, "எனக்கே புத்திமதியா" என்று புத்தியில் மதியில்லாமல் சதி செய்து தன்னை கொல்லவும் நேரிடும் சூழ்நிலை எழலாம் என்பதையெல்லாம் நினைத்தால், முதலாவது புறப்படுவதற்கே நாம் தாமதிப்போம், ஆம், பல கோணங்களில் யோசித்து ஒன்றும் மோசம் வராது என்றால் போகலாம் என்று சிந்திப்போமே தவிர, போவோமா என்பது வேறு விஷயம். வாலிபர்களே! இவனைப் பாருங்கள் புறப்பட்டுப் போனான். போனவன் **நீர் செய்தது தவறு என்று புறப்பாட்டு பாடினால் அகப்பட்டுக் கொள்வோம் என்று அகப்பாட்டு பாடிவிட்டு வரவில்லை.**

கோமகனை நோக்கி, எரேமியாவை துரவிலேபோட்டது "**தகாத செய்கையாயிருக்கிறது**" (38;9) என்கிறார் கோமகன் முகம் கோணாலாகிவிடுமோ, கோமான் கோபித்துக் கொண்டால், ஐயகோ! அது சிங்கத்தின் கர்ஜசனைக்கல்லவா சமானம் (நீதி. 19 ; 12) என்று நினைத்து வேண்டாம், "நீர் செய்தது அவ்வளவாக சரியில்லை, தயவு செய்து எரேமியாவை மன்னியும்" என்றெல்லாம் தாஜா பண்ணவில்லை, நேரிடையாக ராஜாவினிடத்திலே "தகாத செயல்" என்றான். என்னே ஒரு அதீத தைரியம் பாருங்கள். நாமும் கூட இப்படித்தான் இருக்கவேண்டும். யாராக இருந்தாலும், உண்மை முழுமையாக நமக்கு தெரிந்தால், நிச்சயமாக நடந்தது தகாது என்று புரிந்தால் அதை தைரியமாக சொல்வது அவசியம்.

ராஜா இதைக் கேட்டு, முப்பது பேரை, கூட அனுப்புகிறார், அது மாத்திரமா எரேமியாவை சாகும் முன்னே துரவிலிருந்து தூக்கிவிடு என்ற கட்டளை வேறே. இந்த சிதேக்கியா, யார் கேட்டாலும் உடனே தன் முத்திரை மோதிரத்தை கழற்றி கொடுத்துவிடுவான் போல, கொள்கையற்றவன்! இவனெல்லாம் கொற்றவனாக அமைந்தால் அடிமைத்தனம் வராமல் சிங்காரமா வரும்! இப்பொழுதுதான் கவனிக்க வேண்டும் எபேத்மேலேக்கின் அன்பையும் கரிசனையையும்.

தூக்கிவிடும்படி துரிதமாகப் போகிறவன், எப்படி ஆயத்தமாக போகிறான் பாருங்கள். "கிழிந்து போன பழம்புடவைகளையும் கந்தைத் துணிகளையும் எடுத்துக் கொண்டு போகிறான்" எதற்கு? புருவம் உயருகிறது புரிகிறது கவனியுங்கள், அவன் அதை எரேமியாவிடம் கொடுத்து, "உமது அக்குள்களில் கயிறுகளுக்குள் அடங்க வைத்துப் போட்டுக் கொள்ளுமென்றான்" (38; 12) என்ன ஒரு கரிசனைப் பாருங்கள், உதவி செய்யும்போது அந்த உதவியால் மற்றவனுக்கு உபத்திரவம் வந்துவிடக் கூடாது என்று சிறந்த எண்ணம் கொள்கிறான். எரேமியா இருப்பதோ உளையில், உடம்பெல்லாம் நனைந்து போயிருக்கும், ஈரப்பசையிருப்பதால் கயிறு மாத்திரம் கட்டினால் தோலை உரித்து விடும் என்று நினைத்து இப்படி ஏற்பாடு செய்திருக்க அதிக வாய்ப்பிருக்கிறது.

வாலிபர்களே! உதவி செய்வதே சிறந்த குணம் என்றால் அதிலும் உதவி செய்யும்போது உபத்திரவம் வந்துவிடக் கூடாது என்பது பற்றி நினைத்து அவர்களுக்கு எது சிறந்தது என்பதை நிதானித்து செய்வது சால சிறந்த குணம் என்றால் அது மிகையாகாது. இந்த எபெத்மெலேக் அப்படி குணமுடையவன் தான். **உண்மை ஊழியனை உளையிலிருந்து உயர எடுத்து உயிரை காப்பாற்றிய உத்தமன் இவன்.**

உத்தமனுக்கு கர்த்தர் துணை என்று விவிலியம் விளம்புகிறது வாலிபனே! இது முற்றிலும் உண்மை, ஏன் என்றால் தேவன் எபெத்மெலேக்கிடம் சொல்வதை கவனியுங்கள், பாபிலோனியர் வந்து யூதாவுக்கு தீமை செய்வார்கள் "ஆனால் அந்நாளிலே உன்னைத் தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ பயப்படுகிற மனுஷரில் கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன். நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை. **நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்கு கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.**" (எரே. 39 ; 17,18).

கவனித்தீர்களா, வாலிபர்களே! நன்மையை விதைத்தால் நிச்சயம் நமது கர்த்தர் நமக்கு பலன் அளிப்பார். ஆகவே எப்பொழுதும் நியாயம் செய்ய முற்படுவோம் தகாதவைகளுக்கு எதிர்த்து நிற்போம். அப்பொழுது கர்த்தர் நமது பட்சத்தில் நிற்பார் என்பது உறுதி.

**ஜே. பிக்கின்ஸ்**



# இயேசு கிறிஸ்துவை நோக்குங்கள்

**சி**று பிள்ளைகளே, உங்களை இந்த மாதத்தில் சந்திப்பது மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறது. விடுமுறை நாட்கள் முடிந்து, பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வேளை வந்து விட்டது என்று வருந்துகிறீர்களா? வருந்த வேண்டாம். நீங்கள் இயேசுவின் மீது உங்கள் வருத்தங்களையும் உங்கள் சோர்வுகளையும் வைத்து விடுங்கள். அவர் உங்களுக்கு துணை நின்று வழி நடத்துவார். சரி, இம்மாதம் இயேசுவிடம் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ள போகிறோம்.

சரி, நீங்கள் படிக்கும் பள்ளிகளிலோ அல்லது பொது இடங்களிலோ உங்கள் நண்பரை அல்லது தெரிந்தவர்களை பார்க்கும் போது முதலில் எதை கவனித்துப் பார்ப்பீர்கள். அவர்களின் தோற்றம், உடை, நிறம் ஆகியவற்றைத் தானே பார்ப்பீர்கள்! ஆனால் எல்லாவற்றிலும் நம்மிடமிருந்து மாறுபட்ட இரட்சகரான இயேசு கிறிஸ்து, இதிலும் மாறுபட்டிருக்கிறார். எப்படி? நாம் வெளித் தோற்றத்தை தானே பார்க்கிறோம். அவர் இருதயங்களை பார்க்கிறார். (மத். 9 ; 4; லூக். 16; 15)

இப்பொழுது அதை ஒரு ஆதாரத்துடனே பார்ப்போம். ஒரு முறை இயேசு ஒரு சமாரிய ஸ்திரீயினிடம் பேசினதின் மூலம் சீஷர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கினார். இந்த சம்பவம் நடந்த காலத்தில், யூதர்கள் சமாரியரை வெறுத்த காலம், மேலும் ஒரு ஆணும் பெண்ணும் வெளியரங்கமாக பேசாத காலம். அப்படிப்பட்ட காலத்தில் ஏன் இயேசு அந்த ஸ்திரீயோடே பேசினார் என்று குழம்பி போய்விட்டீர்களா?

சரி, விடை தருகிறேன் கவனியுங்கள். ஏனென்றால், அந்த ஸ்திரீ தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தார்.

நாமும் அப்படியே செய்ய வேண்டும். தேவைகளில் இருக்கும் சிலரை நாம் பார்க்கும்பொழுது அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். இயேசு அப்படித்தானே செய்தார்? ஆம், அந்த ஸ்திரீக்கு தேவை என்று அறிந்த பொழுது அவளை சந்தித்து பேசி உதவினார்.

இயேசு அனைவருக்காகவும் மரித்தார் அல்லவா? எனவே நாம்



ஒருவருக்கும் உதவி செய்யாமல் இருக்கக் கூடாது. இந்த விஷயத்தில் அப்போஸ்தலனாகிய பவுலை நாம் பின்பற்றுவது நலமான காரியம். எப்படி என்று யோசிக்கிறீர்களா? அவர்1,கொரி.9; 22ல் என்ன கூறுகிறார் என்று பாருங்கள். "பலவீனனை ஆதாயப்படுத்திக் கொள்ள பலவீனருக்கு பலவீனனைப் போல் ஆனேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி எல்லாருக்கும் எல்லாமுமானேன்" என்று கூறுகிறாரே. பவுல் சந்தித்த யாவரையும் தேவனை நோக்கி நடக்கச் செய்தான்.

இயேசுவை இலக்காகவும், எடுத்துக்காட்டாகவும் வைத்து பவுல் பின்பற்றினான், மேலும் (1 கொரி. 11;1) ல் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள் என கூறுகிறார்.

எனவே அடுத்த முறை நீங்கள் யாரையாவது தேவையிலிருப்போரை சந்தித்தால் உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்! இயேசு எப்படி இவர்களை நடத்துவார்? அப்படியே நீங்கள் செய்து நன்மையான காரியத்தை நடத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**R. Abel Rodger Nayagam**

## கொலோசெயர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலன் பவுல்

காலம் : சுமார் கி.பி. 62

### இந்நூல் மற்றும் பட்டணம் பற்றி

1. நான்கு சிறை நிருபங்களில் இதுவும் ஒன்று.
2. கிறிஸ்து எல்லா சிருஷ்டிப்பைவிட உயர்ந்தவராகவும் முதற்பேரானவராகவும் இருக்கிறார்.
3. இந்நூல் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவை அதிகமாக மையப்படுத்தும் நிருபமாக இருக்கிறது.
4. கொலோசெ பட்டணத்தில் உள்ள சபையை பவுல் நேரிடையாக ஸ்தாபிக்கவில்லை, எப்பாப்பிரா என்பவன் தான் அங்கே சபையை ஸ்தாபித்திருக்க வேண்டும், இங்கே மாத்திரமல்ல லவோதிக்கேயாவிலும், எரோப்போலியிலிலும் அவன் ஸ்தாபித்திருக்கலாம் (கொலோ.4;12,13)
5. எபேசுவிலே பவுல் இருந்தபோது அவரால் சுவிசேஷத்தை எப்பாப்பிரா கேட்டு அதற்கு கீழ்ப்படிந்திருக்கலாம் (அப். 19; 10)
6. எரோபொலிக்கு 12 மைல் தொலைவிலும், லவோதிக்கேயா பட்டணத்திற்கு 10 மைல் தொலைவிலும் கொலோசெ பட்டணம் இருந்தது.
7. கிரேக்க தத்துவங்களால் ஈர்க்கப்பட்ட பிரிகியர்கள் அங்கு அதிக அளவில் இந்த பட்டணத்தில் இருந்தார்கள்.

### இந்நூலின் செய்தி

1. கிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே மீட்பு உண்டு (கொலே1; 14)
2. கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர்கள் ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே ராஜ்யம் அப்பொழுதே ஸ்தாபிக்கப்பட்டாயிற்று (கொலோ.1; 13)
3. ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணுதல் என்பதாகும் (கொலே.2;12)
4. நாம் எதை செய்தாலும் அதை கிறிஸ்துவின் அதிகாரத்தின்படி செய்ய வேண்டும் (கொலே. 3; 17).

# பரலோக பயணிகளே

பயணங்கள் பலவிதம் என்பது எப்படி உண்மையோ அப்படியே பாதைகளும் பலவிதம். எல்லாப் பாதைகளும் நாம் விரும்புகிற இடத்திற்கு கூட்டிச் செல்லாமல் தான் விரும்பின இடத்திற்கு நம்மை கூட்டிச் செல்லுகின்றன. இன்று அநேகர் மேற்கொள்ளுவதோ பாதை மாறிய பயணம் இதை நம்மில் ஒருவரும் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் இதில் அலைந்து திரிந்தும் சரியான இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும். அதுமட்டுமல்ல பிறரையும் அது இளைக்கப்பண்ணும். (பிர. 10; 15) ஆகவே வழிகளிலே நின்று பூர்வ பாதை எவையென்று கேட்டு அதில் நடக்க வேண்டும், ஏனெனில் அதில் நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும். அதில் நல்லவழி எவையென்று கண்டுபிடிக்க வேண்டும். (எரே. 6 ; 16) இவைகளை ஆவிக்குரிய வகையிலே அறியவேண்டுமானால் அது தொடர் வண்டி பயணம் போன்றது. இந்த ஆவிக்குரிய வழியிலே இரண்டு பாதைகள் இருக்கின்றது இவ்விரண்டிலும் இரண்டு தொடர் வண்டிகள் நிற்கின்றது. ஒன்று நரகத்தை நோக்கி இன்னொன்று பரலோகத்தை நோக்கி... இவ்விரண்டும் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டுள்ளது. ஆங்காங்கே நிறுத்திப் பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டுள்ளது. இதில் சிலர் ஏறுவதும் இறங்குவதும் வாடிக்கையாகிவிட்டது. இது பரலோக பயணிகள் கவனத்திற்கு.

## எச்சரிக்கை

ஒவ்வொரு பயணிகளுக்கும் அவசியமாக இருக்க வேண்டியது எச்சரிக்கை, நம்பிக்கை. இவ்விரண்டும் நம்முடைய பயணத்தின் அருமையான வழிகாட்டிகள் ஒவ்வொரு தனிப்பட்ட பயணியும் கவனத்தோடும் எச்சரிப்போடும் இருக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய பயணத்தில் நாம் விரும்பிய இடத்திற்கு நாம் போய் சேர்வதைத் தடுக்க பல இடர்பாடுகள் ஏற்படலாம். எனக்கு பிரியமான சகோதர, சகோதரிகளே, ஒரு பெரிய எதிர்பார்ப்போடு பரலோக வண்டியில் பயணம் செய்ய ஏறிக்கொண்டோம். அந்த எதிர்பார்ப்பும் சந்தோஷமும்

நம்மில் நிறைவேற வேண்டும் அதற்கு தடையாயிருப்பவைகளை தகர்த்தெறிய வேண்டும். கள்ளர்கள் (வேதப் புரட்டர்கள்) அருகிலுள்ள பயணிகள் உங்கள் கவனத்தை திசை திருப்புவார்கள் எதிரே வரும் வாகனம் விபத்துக்குள்ளாக்கும் நிலை (விசுவாசத்தை கவிழ்த்துப் போடும் நிலை) நெருடலான பாதை (சோதனைகள்)


கிராசிங் (குறுக்கிடும் பாவங்கள்) இன்னும் பலகாரியங்கள் நாம் பயணிக்கும் பயணத்தில் குறுக்கிடலாம். மத் 7.13, 15 பரலோக வண்டி, ஓட்டுநர், இயேசு, நரலோக வண்டி ஓட்டுநர் பிசாசு, தாங்கள் விரும்பின இடத்திற்கு நம்மை கொண்டு செல்ல முயற்சி செய்கின்றனர். இரக்கத்தையும் நியாயத்தையும் சிநேகித்து சத்தியத்தையும் சமாதானத்தையும் சார்ந்திருக்கும் போது நாம் பரலோக வண்டியில் தொடர்ந்து பயணிக்க முடியும். நரலோக வண்டியில் பயணிக்க அக்கிரமத்தையும் பாவத்தையும் நடப்பிக்க வேண்டும் சத்தியத்தை நம்பாமலிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நரக வண்டியில் பயணிக்க முடியும். எதிலே நாம் தொடர்ந்து பயணிக்கின்றோமோ அதின் முடிவான இடத்தை அடைந்தே தீரவேண்டும் மனிதனே! பாவம் செய்யாதே என்று தேவன் சொல்லுகிறபோது மனிதன் என்ன நினைக்கின்றான்? நாம் பாவம் செய்கின்ற போது தேவனுக்கு ஏதோ நஷ்டம் உண்டாகிறது போல அதினால்தான் நம்மை பாவம் செய்ய வேண்டாம் என்கிறது போலும் நினைக்கின்றான். யோபு. 35 ; 8 மனிதனின் பிரயாசத்தின் பலன் ஒவ்வொன்றும் அவனையே வந்து சேரும். விபச்சாரம் செய்தால் எய்ட்ஸ் போன்ற வியாதிகளை உண்டாக்கும். மதுபானம், புகைபிடித்தல் போன்ற பாவங்கள் உடலை புகைத்து உயிரைப் பகைக்கச் செய்கிறது திருட்டு பொய் பாவங்கள் அவமானத்தையும் கொடுத்து, நிம்மதியை குலைக்கச் செய்கிறது. அவனவன் செய்கின்ற கிரியைக்களுக்குத் தக்க பலனை அவனவன் அடைந்தே தீர வேண்டும் (கலா. 6 ; 7 1. தீமோ.5; 24, 25 சங் 62; 12). இவைகளெல்லாம் நம்முடைய பிரயாணத்தில் நம்மை மோசம் போக்குகின்றதாயிருக்கின்றதேயொழிய நாம் விரும்புகின்ற இடமாகிய மோட்சத்திற்கு ஒருபோதும் வழி நடத்துவதில்லை எபே. 4 : 21, 22 இந்தப் பரலோக வண்டியிலே பணமில்லாமல் பயணிக்க முடியும். ஆனால் நல்ல மனமில்லாமல் பயணிக்க முடியாது. ஆகவே மனதின் அரையைக் கட்டிக் கொண்டு எச்சரிப்போடு எதிர்கொள்வோம் பரலோக பயணத்தை.

## நம்பிக்கை

நம்முடைய பயணத்திலே அடுத்து நம்மிடத்திலே இருக்க வேண்டியது நம்பிக்கை. நம்பிக்கையில்லாமல் இந்தப் பயணத்திலே வெற்றி பெற முடியாது. அதே சமயத்தில் நம்பிக்கையில்லாத பயணம் பயத்தையும் நடுக்கத்தையும் என்னாகுமோ ஏதாகுமோ என்ற பதற்றத்தையும் ஏற்படுத்தும் நம்முடைய பரலோக பயணத்தில் நம்பிக்கையிருக்கட்டும் ரோமர். (12; 12) கர்த்தர் மீது வைத்த நம்பிக்கையிலே சந்தோஷமாயிருக்க வேண்டும் சிலர் இந்நாள் வரைக்கும் கர்த்தர் மீது வைத்த நம்பிக்கையை பாரமாக எண்ணுகிறார்கள். கர்த்தருக்குள் வந்ததும் உலகப் பூர்வமான காரியங்களைக் கண்டு பயப்பட்டு கர்த்தரை விட்டு ஒதுங்குகிறார்கள். கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பதை சந்தேகிக்கின்றனர். சோதனையைக் கண்டு சோர்ந்து போய்விடுகின்றனர். நம்புங்கள் பிரியமானவர்களே, இதோ கர்த்தர் சொல்வதைக் கேளுங்கள் உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் ஆமென். (மத்தேயு. 28; 20) இப்படி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்த கர்த்தர் நம்முடைய இருக்கையில் ஏன் நம்பிக்கையில் தளர்ந்து போக வேண்டும். பயப்படாதேயுங்கள். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் (பிலி. 4; 4) இயேசு கிறிஸ்து நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லமை உள்ளவர் என்பதையும் அவர் மீது வைத்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது என்பதையும் அறிவோம். நமக்கு அளிக்குப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாய் சந்தோஷமாய் பிரயாணத்தை மேற்கொள்வோம். (1. பேதுரு. 1 ; 13) இந்தப் பயணத்தில் நம்பிக்கையை உலரச் செய்யும் உபத்திரவமோ வியாகுலமோ துன்பமோ பசியோ பட்டினியோ நிர்வாணமோ நாசமோசமமோ மரணமோ ஜீவனோ வருங்காரியமோ நிகழ்காரியமோ உயர்வோ தாழ்வோ வேறெந்தக் காரியமானாலும் நம்மை கிறிஸ்துவிலிருந்து பிரிக்காதபடி (ரோமர் 8. 36 – 39) அந்த பரம சந்தோஷத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற நம்பிக்கையில் கங்கனம் கட்டித் தொடருவோம் பரலோகப் பயணத்தை.

தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள் மேல் இருப்பதாக ஆமென்!

**க. சேகர்,**
திருப்பூர்.




## நடப்புச் செய்திகள்

1. மதமாற்ற தடை சட்டம் பற்றிய போப்பின் கருத்துக்கு ஜெயலலிதா கண்டனம்
2. ஜெயலலிதாவின் கண்டனத்திற்கு கிறிஸ்தவ அமைப்புகள் எதிர்ப்பு
3. கந்து வட்டியை ஒழிக்க, தமிழக அரசு அவசர சட்டம்
4. முஷராப், அதிபராகவும், ராணுவத் தளபதியாகவும் இருப்பதில் தவறில்லை என்று பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு.
5. ஈராக்குக்கு படை அனுப்பும் விஷயம் : இந்தியாவுக்கு அமெரிக்கக் குழு வருகை
6. லாராவின் தலைமையிலான மேற்கு இந்திய தீவுகள் அணி வலுப்பெறுகிறது.

# ஏன் யூதர்கள் இயேசுவை புறக்கணித்தனர்?

"சிலுவையில் அறைய வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள்..."

"...... அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்...." (மத். 27 ; 22, 25)

யூதர்கள் தங்கள் மேசியாவை எதிர்பார்த்து காத்திருந்தனர். பின்பு, ஏன் மேசியா வந்தவுடன் அவரை அசட்டை செய்து புறக்கணித்தனர்?

**1. அவர் அவர்களை ஏமாற்றிவிட்டார்**

இயேசு யூதர்களுக்கு ஒரு ஏமாற்றம். ஏன்? அவர்கள் (யூதர்கள்) தீர்க்கதரிசனங்களை படித்து பார்த்து, மேசியா இப்படித்தான் இருக்க வேண்டுமென்று தங்கள் மனதை ஆயத்தம் செய்து, மேசியாவை எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடி அவர் இல்லாதது, அவர்களுக்கு பெரிய ஏமாற்றமே!

தாவீதின் சிங்காசனத்தில் உட்காரும் ஒரு ராஜாவாக இயேசு வருவாரென்று தீர்க்கதரிசனத்தை அவர்கள் நன்கு படித்திருந்தனர். ஆனால் இதை வசன ரீதியாகவே புரிந்திருந்தனர். ஆகவே இயேசுவை பூமிக்குரிய ஒரு ராஜாவாகவே எதிர்பார்த்தனர். அவர் ஒருமுறை தம்மை மறைத்துக் கொண்டார். காரணம் அவரை ராஜாவாக ஏற்படுத்த முயன்றனர் (யோவான். 6 ; 15).

இப்படி, ராஜ்யத்தைப் பற்றியும் ராஜாவைப் பற்றியும் தவறாக புரிந்து கொள்ளுதல் சீஷர்களிடமே கூட இருந்தது. ராஜ்யத்தில் யார் பெரியவனென்று, சண்டை போட்டனர்.

இயேசு மரித்து போனபின், அழுது கொண்டே சொன்னது, "அவரே இஸ்ரவேலை மீட்டி ரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்" (லூக். 24 ; 21) அப். 1ம் அதிகாரத்தின் சம்பாஷனைகளில் கூட அப்போஸ்தலர்கள், இன்னும், உயிர்த்தெழுந்த பின்பும் கூட ராஜ்யத்தை சரியாக புரிந்து கொள்ளாததையே காட்டுகிறது. இயேசு, என்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்று சொன்னவுடனேயே யூதர்கள் ஏமாந்தனர். இயேசுவுக்கும், இவர்களுக்கும் அதிகமான கருத்து வேறுபாடுகள் இருந்தது. ஆகவே இவரை ஏற்கவில்லை. அவர்களுடைய எதிர்பார்ப்புகளை இயேசு நிவர்த்தி செய்யாததால் அவரை விட்டு பின் மாற்றம் அடைந்து போயினர்.

நம்மில் அநேகர் இப்படி பின் மாற்றமடைந்து போயுள்ளனர் - போக எண்ணுகின்றனர்.

## 2. அவர் அவர்களுடைய லௌகீக ஆசைகளை கண்டித்தார்

யூதர்களுடைய மாம்ச சிந்தையுள்ள வாழ்க்கை முறையானது, இயேசுவால் கண்டிக்கப்பட்டது. இதை மக்கள் வெறுத்தார்கள். (லூக். 8 ; 26 - 39 ; மாற்கு 5 ; 1 - 20). அநேக அசுத்தாவிகள் பிடித்த மனுஷனை இயேசு சுத்தமாக்க, இரண்டாயிரம் பன்றிகளுக்குள் அந்த ஆவிகள் நுழைந்து கடலில் விழுந்து எல்லாம் மாண்டு போயின. இந்த மனுஷனோ புத்தி தெளிந்து வஸ்திரம் தரித்திருந்தான். அந்த பன்றிகளின் எஜமானர்களோ, அவரை, அந்த தேசத்தை விட்டு போகும்படி கேட்டுக் கொண்டார்கள். இங்கு வஸ்திரம் தரித்து, புத்தி தெளிந்த மனுஷனைவிட "பன்றிகள்" என்று ஆஸ்திக்கே அதி முக்கியத்துவம் கொடுத்தனர்.

இயேசுவின் போதனைகள் - லௌகீக வாழ்க்கைக்கு கொஞ்சம் முக்கியத்துவத்தையும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அதி முக்கியத்துவத்தையும் கொடுத்தன.

'மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?' (மத்.16; 26) மனிதன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக எதை கொடுக்க முடியும்? என்று கேட்கிறார்.

மாம்சத்திற்காக மாத்திரம் வாழும் நோக்கமுடையவன் இயேசுவை ஏற்றுக் கொள்ளமாட்டான். இன்றைக்கும் இதில் மாற்றமில்லை தேவனை விட உலகத்தை ஆதாயப்படுத்துபவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தால் இடறுகிறார்கள் - அவரை புறக்கணிக்கின்றனர்.

## 3. அவர்கள் எதிர்பார்த்ததை விட இவர் மிகவும் எளிமையும், எதார்த்தமாயிருந்தார்.

யூதர்கள், இயேசுவை புறக்கணித்தனர். ஏனென்றால் அவருடைய, 'தாழ்மை' 'எளிமை' நாசரேத்திலிருந்து வரப்போகிற இயேசு, இப்படிப்பட்டவராக இருக்க கூடாது. இது யூதர்களின் கருத்து. ராஜாவின் அரண்மனையில் பிறக்க வேண்டுமென்று எதிர்பார்த்தனர். ஆனால், இதற்கு மாறாக இயேசுவின் பிறப்பு அமைந்திருந்தது. ஏழ்மை பிறப்பு, அவருடைய சொந்த ஊரில் அவர் செய்த அற்புதங்களை பார்த்த அவர்கள் 'இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா' (மத். 13; 55) என்றனர். இயேசு - மிகவும் எளிமையும் எதார்த்தமும் நிறைந்தவர். மனிதருடைய விசுவாசத்தை பரீட்சிக்க அற்ப காரியங்கள் அவர் கட்டளையிட்டார்.

உதாரணமாக பிறவி குருடனை சேற்றை குழப்பி கண்களில் பூசி - கழுவ சொன்னார் (யோவான் 9 ; 6,7) பவுலும் கூட சொல்லுகிறார், "ஞானிகளை வெட்கப் படுத்த தேவன், பைத்தியமானவைகளை தெரிந்து கொண்டாராம். (1. கொரி. 1; 27, 28) பழைய ஏற்பாட்டில் - நாகமான் (2. ராஜா. 5ம் அதி) தீர்க்கதரிசி, தாம் என்ன செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டவுடன், கோபப்பட்டான் காரணம் யோர்தானில் முழுகுவது என்பது அற்பமான ஒன்றாக அவனுக்குப் பட்டது.

தேவனுடைய வழி எப்போதுமே தெளிவான வழி எளிமையான வழி. எதார்த்தமான வழி.

ஆனால் அநேகர் பிரமிக்கத் தக்க ஆச்சர்யமான மதமாக கிறிஸ்தவம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர்.

எளிமையான - எதார்த்தமான கிறிஸ்தவத்தைக் குறித்து இப்படிப்பட்டவர்கள் வெட்கப்படுகின்றனர். இதினாலும் அநேகர் விழுந்து போகின்றனர். இயேசுவை மறுதலித்து போகின்றனர்.

நீங்கள் தேவனை பிரியப்படுத்த விரும்பினால் கிறிஸ்துவிலுள்ள எளிமையினால் அதிருப்தி படாதவர்களாக நீங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி, கெடுக்கப்படுமோ வென்று பயந்திருக்கிறேன்" (2. கொரி. 11 ; 3) என்று பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.

இறுதியாக, நம்முடைய விருப்பு வெறுப்புகளுக்காக இயேசுவை புறக்கணிக்க போகிறோமா? நம்முடைய எதிர்பார்ப்புகளை நிவிர்த்தி செய்யாத போது நாம் அவரை அசட்டை செய்கிறோமா? நம்முடைய லௌகீக ஆசைகளை அவர் கண்டிக்கும் போது நாம் அவரை விட்டு விலகி செல்கிறோமா? நாம் அவருடைய எளிமையை கடைபிடிக்க அவர் நமக்கு சொல்லும் போது நாம் அவரை அசட்டை செய்கிறோமா?

யூதர்கள் அவரை அசட்டை செய்தது போல் நாமும் அவரை அசட்டை செய்யலாகாது.

**வே. தானியேல் துரைராஜன்,**
திருச்சி.

# இயேசுவும் சிலுவையும்

உலகம் முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையும், அவருடைய சிலுவையும் மையமாக கொண்டுள்ளது. அவருடைய தியாகம் மனிதனை கடந்த 1900 ஆண்டுகளுக்கும் மேலாக, தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. சிலுவையிலறையப்படுவதற்கு முன், கிறிஸ்து அவமான முறையில் நடத்தப்பட்டார். உலகரட்சகர் இயேசு தன்னுடைய விரோதிகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச் சேவகரால் துன்புறுத்தப்பட்டு பரிகசிக்கப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து, அதன்பிறகு சிலுவையில் அறைய அவர் கொண்டு போகப்பட்டார். சிலுவை மரணத்தை மத்தேயு இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். "அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டு போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்.... அவர்கள் உட்கார்ந்து அவரை காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் (மத் 27 : 35 - 36) சில மணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு கொல்கதாவில் தன் உயிரை விட்டார்.

**சிலுவை - ஒரு அடையாளம் :**

கிறிஸ்துவின் பேருண்மைகளை சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தை சுட்டி காட்டுகிறது. பாவத்தின் விளைவை சிதைந்து போன குடும்பங்களிலும் பயங்கர

## அநித்தியமானவரா?

அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபைக்கு இரண்டாம் நிருபம் எழுதுகையில், "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்திய மானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என்கிறார். (II கொரி.4:18) ஆனால், இன்றைக்கு நான் தேவனை கண்டேன் என்று சொல்லும் கூட்டம் இந்த வசனத்திற்கு என்ன பதில் சொல்லும் அவர் அநித்தியமானவரா? சர்வ நிச்சயமாய் இல்லை, யோவான் சொல்கிறார், "தேவனை ஒருவனும் ஒருகாலும் கண்டதில்லை" (யோ.1:18) என்று. ஆகவே கண்டேன் என்று சொல்லுகிறவர்கள் உண்மையானவர்களா, அல்லது வசனம் உண்மையானதா நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

பகையுணர்விலும் ஒருவருடைய உரிமையை மற்றவர் பரித்து கொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால் இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனின் மாபெரும் முயற்சியாகும். தேவ குமாரனின் மரணத்திற்கு பாவம் தான் பொறுப்பாகும். ஒரு சமயம் நான் மறைந்த "லியோ போல்ஸ்" என்பவர் "இயேசுவை சிலுவையிலறைந்த பாவம்" என்ற தலைப்பில் பிரசங்கிப்பதைக் கேட்டேன். அவர் அறியாமையான பாவம் என்பதிலிருந்து தொடங்கி, விரோதம், பொறாமை, திருட்டு பொய், பண ஆசை, ஒழுக்கக் கேடு ஆகிய பல பாவங்கள் பற்றி பேசினார். அந்தப் பிரசங்கத்தில் போல்ஸ் அவர்கள் நீதி தவறுதலை குறித்துப் பேசும்போது, பிலாத்தைக் குறிப்பிட்டார்" தான் என்ன செய்ய வேண்டுமென்பது தெரிந்தும் அதை செய்ய முடியாத அளவு பெலவீனமாயிருந்தான்" அவன் உறுதியாகச் செயல்பட்டிருக்கலாம். ஆனால் தனக்கு கனத்தைக் கொடுக்கும் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு ஒழுக்க ரீதியில் ஒரு கோழையாக நடந்து கொண்டான்.

**இரக்கத்தின் அகலம் :**

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு அடையாளம் இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டுமென நீதி நீடிக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக் கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக, அவன் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம், மேதியர், பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர் பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. மாத்திரமல்ல அவைகளின் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்குக் கண்ணும் பல்லுக்கு பல்லும் கேட்கப்படும் ஒரு சமயம் ஒரு இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களைக் கெடுத்துப் போட்டான். அவனுடைய குற்றத்திற்குத் தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று.

அந்த இளம் குற்றவாளி, விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்துவிட்டது. அங்கே, நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. நீதிபதி மகனை நேசித்தான் கூடவே நாட்டின் சட்டத்தையும் மதித்தான் தவறு செய்தவன் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அன்பையும் தனது இரக்கத்தையும் காட்ட வேண்டும் நீண்ட சிந்தனைக்குப் பிறகு நீதிபதி தன்

மகனைப் பார்த்து இவ்விதம் சொன்னான். உன்னுடைய நீதிபதி என்ற முறையில், நீ அழித்த இரண்டு கண்களுக்கு பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்படவேண்டும் என்ற சட்டத்தின் தண்டனையை நான் விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்குக் குறைவாக நான் விதிக்க முடியாது. ஆனால் உனது தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன்" என்று இந்த வகையான இரக்கத்தின் பாடத்தைக் குறித்து பவுல் சொல்லியுள்ளார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். சிலுவை மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

**இரட்சிப்பின் வல்லமை :**

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப்படுத்துகிறது "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. (1 கொரி 1 : 18) கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான்.

விவாகரத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு கணவனும் மனைவியும் மரிக்கும் தருவாயிலிருந்த தங்களது குழந்தையின் படுக்கையின் இருபுறமும் நின்றிருந்ததாக ஒரு உண்மைச் சம்பவம் உண்டு. அந்த குழந்தை ஒரு கையினால் தனது தந்தையின் கரத்தைப் பற்றியிருந்தது இன்னொரு கரத்தால், தாயின் கைகளைக் கெட்டியாகப் பிடித்திருந்த இந்நிலையில் அந்தக் குழந்தையின் உயிர் பிரிந்தது. ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்குத் திரும்பியது. பரஸ்பர அன்பில் ஒன்றாக்கப்பட்ட பிஞ்சுக் கரங்களால் கிட்டிச் சேர்க்கப்பட்ட கணவனும் மனைவியும் ஒன்று சேர்க்கப்பட்டார்களென்றும், ஒரு முறிந்து போன குடும்பம் ஒன்றானது என்றும் அது சொல்கிறது.

கொல்கதாவில் தேவகுமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனை பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனின் இருதயத்தை தொட்டுள்ளார். அதன் மூலம், சிலுவையில் தொங்கின கிறிஸ்து, மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார். நமது இரட்சகர் மரித்த சிலுவை மரம் சாதாரணமானது என்று எண்ண வேண்டாம். சிலுவை ஒரு மகத்தான பாடத்தைக் கற்பிக்கிறது. யோவான் அப்போஸ்தலன் தனது நூலில் சிலுவையின் மேன்மையை ஒரு வசனத்தில் திரட்டி கொடுத்துள்ளார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவா 3 : 16).

**Willard Collins**



# HEAR THE VOICE OF TRUTH

**ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
**RNI No. 47661 / 87 - New Delhi**
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

### ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY SAKURA ERODE © 2254984